DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM**

| | | |
|---|---|---|
| Case No. | : | **STC No. 757/2025** |
| Deposition of witness | : | **PW-2** |
| Name | : | சரவணபவகுமார் |
| Father's /Husband Name | : | ராஜன் |
| Village | : | பேரளம் |
| Taluk | : | பேரளம் |
| Age | : | 56 |
| Occupation | : | காவல் உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 17th day March 2026.
Accused Present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது பேரளம் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.09.2023ம் தேதி மதியம் 02.00 மணிக்கு நான் பேரளம் காவல் நிலைய பொறுப்பிலிருக்கும்போது, திருஞானம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று காவல் நிலைய குற்ற எண். 468/2023, சட்டப்பிரிவுகள் 294(b) இதச-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அ.சா.1 கொடுத்த புகார் மனு **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்தேன். அவைகள் முறையே **அ.சா.ஆ.4** மற்றும் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னிட்டு சாட்சிகள் 1 முதல் 6 வரை ஆகியோர்களை விசாரணை செய்து தனிதனியே வாக்குமூலம் பதிவு

செய்துள்ளார். சம்பவம் உண்மையென தெரியவர எதிரியை காரணம் கூறி கைது செய்து தக்க நிலைய ஜாமீனில் விடுவித்தேன். பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீதான குற்ற இறுதியறிக்கையை நீதிமன்றத்தில் சமர்பித்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் சொல்லும் நாள் நேரம் இடத்தில் புகார் மனு பெறப்படவில்லை என்றாலும், நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும், எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Muncif -Cum-Judicial Magistrate,
Nannilam.